# மேட்டுப்பாளையம் நகராட்சி

15.10.2018ம் தேதி திங்கட் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு **82,83,84** மற்றும் **85**ன் அடிப்படையில் மேட்டுப்பாளையம் நகராட்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை அரசாணை எண்:73, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்:76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**26.07.2018**ன்படி சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** அட்டவணை **4**ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்நகராட்சியில் சொத்துவரியினை **01.04.2018** முதல் பொதுசீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதை வார்டு வாரியாக, மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் கேட்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் தினமலர் நாளிதழில் **13.09.2018**ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து **30** நாட்கள் கடந்த நிலையில் ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை என தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் கூட்டப்பொருள் வைக்கப்படுகின்றது. மேலும், இது சம்பந்தமாக மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2732/2018/அ2<br>**தீர்மானம் எண்:** 117<br>**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது |
| 2. | இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு **10.10.2018**ல் **27**வது முறையாக நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர ஒருவரும் வரவில்லை.<br>பாரதியார் நூற்றாண்டு விழா கடை எண்.7ற்கு மட்டும் கீழ்க்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>மாத வாடகை<br>**1.** திரு. முகம்மது உசேன் த/பெ.அனிபா, **25/24**, நெல்லித்துறை ரோடு, மேட்டுப்பாளையம். — ரூ. **14,550/–**<br>**2.** திரு. அப்துல்கரீம் த/பெ.அப்துல் மஜீத், **141/**A, பாக்குகாரத் தெரு, மேட்டுப்பாளையம். — ரூ. **4000/–**<br>மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. முகம்மது உசேன் த/பெ.அனிபா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையானது அங்காடிமதிப்பின்படி நிர்ணயிக்கப்பட்ட மாதவாடகைத் தொகையைவிட கூடுதலாக உள்ளதாலும் , 27–வது அழைப்பாக உள்ளதாலும் மேலும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு **10.10.2018** முதல் இக்கடையை ஒப்படைப்பு செய்ய அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு அனுமதி வேண்டி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கடையை ஒப்படைக்கலாம், கூட்டப் பொருள் வைக்கப்படுகின்றது.<br><br>அலுவலகக் குறிப்பு : **1.** அனுமதி அளிக்கலாம்<br>**2.** அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கடை ஒப்படைப்பு செய்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.780/2018/ அ1<br>**தீர்மானம் எண்** : 118<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சியின் மூலமாக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தில், சர்வே வார்டு "சி" பிளாக் '17' நகரளவு எண்.60ல் 2946 சதுர அடி பரப்பில் புற நோயாளிகளின் பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தங்கும் விடுதி அமைத்தல் பணிக்கு DAY-NULM-SUM-4th-PSC-2017-18 திட்டத்தின் கீழ் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண்.38038/2013/UPA2/நாள்.15.02.2018ல் வரப் பெற்றதில் இப்பணிக்கு முழுமானியத் தொகை ரூ.40.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது அறியப்பட்டது. எனவே இப்பணியினை மேற்கொள்ள உரிய மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கு வைக்க மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.1281/2018/இ1)<br><br>**தீர்மானம் எண்:** 119<br>**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது |
| 4. | மேட்டுப்பாளையம் நகராட்சி கெண்டையூர் ரோட்டில் அமைந்துள்ள சான்ஜோஸ் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி இந்நகராட்சி மீது தொடர்ந்துள்ள வழக்கு எண்கள்.21956/2018 மற்றும் கேட்பு மனு எண்.25744 மற்றும் 25745/2018 சம்பந்தமாக (Counter Affidavit) எதிர்வாதுரை தயார் செய்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கட்டணம் ரூ.15,000/– வழங்கக் கோரி வழக்கறிஞர் திரு. P. ஸ்ரீனிவாஸ் என்பவர் கேட்டுள்ளதால் , மேற்படி தொகையை வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.3292/2018/அ2<br><br>**தீர்மானம் எண்** : 120<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |
| 5. | இந்நகராட்சியில் வசூல் தொகையினை எண்ணுவதற்கு Counting Machine மற்றும் நோட்டுகள் சரிபார்க்கும் எந்திரம் ஒன்று வாங்குவதற்கு கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br><br>ரூ.<br>1. Future Era – 19,765/–<br>2. I Cool Systems – 20,178/–<br>3. Eye Soft – 20,473/–<br><br>மேற்கண்ட மூன்று நிறுவனங்களில் குறைவாக விலைப்புள்ளி வழங்கி உள்ள Future Era நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.3084/2018/டி1<br><br>**தீர்மானம் எண்** : 121<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் வருமானவரி 2007–2008 முதல் 2017–2018 வரையில் பல்வேறு காரணங்களுக்கு ரூ.34,77,860/– செலுத்த தெரிவித்து வருமான வரி துறையினரால் கேட்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்காண் தொகைக்கான விவரம் கண்டறிந்து குறைகளை களையவும், சரிசெய்து பதிவேற்றம் செய்ய தனியார் நிறுவனமான NPRV Associates Coimbatore நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும், 2018–2019ம் நிதியாண்டிற்கு E-Filing செய்யவும் அதற்கான செலவினம் தோராயமாக ரூ.1,00,000/– மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டி கூட்டப் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காண் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும்<br>(ந.க.எண்.357/2017/பி1)<br><br>**தீர்மானம் எண்** : 122<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |
| 7. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை செலுத்தக் கோரி அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கும் சென்றடையும் வகையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி அமைத்து விளம்பரம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/–ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி எதிர்நோக்கி ஆட்டோ விளம்பரம் செய்யவும் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3293/2018/அ2)<br>**தீர்மானம் எண்** : 123<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |
| 8. | இந்நகராட்சியின் 2018–2019ம் ஆண்டுக்குரிய வரி மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை செலுத்தக்கோரி ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய உள்ளூர் ஆட்டோ ஒட்டுநர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>வ.எண். — ஒட்டுநர் பெயர் — தொகை ரூ.<br>1. — சி. நடராஜன் — 2000/–<br>2. — வசந்த குமார் — 2300/–<br>3. — முகமது அப்பாஸ் — 2150/–<br><br>மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைவாக கொடுத்துள்ள வ.எண்.1 திரு. சி. நடராஜன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க தனு அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியமைக்கும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3293/2018/அ2)<br>**தீர்மானம் எண்** : 124<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.10.2018ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட தளவாட பொருட்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.3975/எச்1/2018)<br><br>**தீர்மானம் எண்** : 125<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த்திட்டங்களிலும் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்க குளோரின் வாயு (Liquid chlorine) பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நகரில் ஆங்காங்கே டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்கள் வராவண்ணம் தடுக்க குளோரின் வாயு கூடுதலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கையிருப்பில் குறைவாக உள்ளதாலும் இனிவரும் மழைக்காலங்களில் கூடுதலாக தேவைப்படுவதாலும். குளோரின் வாயு வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலைதரப்பட்டியலில் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு குளோரின் வாயு அதிகம் தேவைப்படுவதால் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2209/இ1/2012)<br><br>**தீர்மானம் எண்** : 126<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |

3. மேட்டுப்பாளையம் நகராட்சியில் 17.10.2018. ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.20 நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பழுதுபார்த்தல் மற்றும் மராமத்து பணிகள் செய்தல் | 4.10/– | எம். வேலுசாமி | 0.12% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | கே. வேலுசாமி | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2. | வார்டு எண் 5 வள்ளுவர் நகராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள விழா மேடைக்கு மேற்கூரை அமைத்தல் | 3.90/– | ஸ்ரீ ஆங்க் சுஸ்மா இன்பிரா ஸ்டக்ஸர் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன் | 0.11% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3. | வார்டு எண்.7. காந்தி மைதானம் மாரியம்மன் கோவில் பின்புறம் சிறிய நுண்ணுயிரி உரமாக்குதல் மையம் அமைத்தல் | 1.45/– | தனம் அசோசியேட்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீசக்தி கன்ஸ்ட்ரக்ஷன் | 1.08% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| 4. | வார்டு எண் 21 போரைய கவுடர் வீதிதியல் சிறிய நுண்ணுயிரி உரமாக்குதல் மையம் அமைத்தல் | 1.50/– | சி. நாகராஜ் | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | கே. வேலுசாமி | 0.45% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5. | புதிய நகராட்சி அலுவலகத்தில் ஆணையர், பொறியாளர் மற்றும் கணினி அறைகளுக்கு குளிர் சாதன பெட்டி வாங்கி பொருந்துதல் | 1.90/– | சி. நாகராஜ் | மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | கே. வேலுசாமி | மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற வ.எண்.1 முதல் 5 வரையிலான பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3369/இ1/2018)

**தீர்மானம் எண்** : 127

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது

4. மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களில் உள்ள பம்பின் பழுதுகள் அகற்றவும் நகரில் உள்ள பகிர்மானத்தில் உள்ள சுலிஸ் வால்வுகள் பழுதானதை வெல்டிங் வைத்து சரிசெய்யவும் மற்றும் மோட்டார்களுக்கு தேவையான உதிரிச்சாமன்கள் விநியோகம் செய்யவும் 15.10.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் 30.10.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை ரூ./ இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. அல்கெம் இண்டன்டீரிஸ், 32.A. ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம் | ரூ.4,00,000/– | ரூ.3,5,165/– |
| 2. | M/s. R.V.எலக்ரிகல்ஸ் 25 A, R.R.சாமி லைன், காட்டூர், கோயமுத்தூர். | ரூ.4,00,000/– | ரூ.3,52,660/– |

அலுவலகக் குறிப்பு : மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதைவிட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் M/s. அல்கெம் இண்டன்டீரிஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2605/2018/இ1)

**தீர்மானம் எண்** : 128

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது

5. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங்மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரி செய்யவும் பொதுக்குழாய் மற்றும் பொதுக் கழிப்பிடங்களுக்கு தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும் 15.10.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் 30.10.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர்பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் % |
|---|---|---|---|
| 1. | கே.வேலுச்சாமி ஒப்பந்ததாரர் , பாலப்பட்டி | ரூ. 2,00,000/– | 1.84% அதிகம் 2,00,000/– |
| 2. | எம். வேலுச்சாமி, 6EB காலனி, கெண்டையூர், மேட்டுப்பாளையம். | ரூ.2,00,000/– | 0.02% குறைவு 1,96,441.00/– |

அலுவலகக் குறிப்பு : மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் (2ல்) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள எம்.வேலுச்சாமி என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2604/2018/இ1)

**தீர்மானம் எண்** : 129

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| **6.** | இந்நகராட்சியில் காரமடை நீர் உந்து நிலையத்தில் காவலர் ஆக பணிபுரியும் திரு. D. ஜான்பாஸ்கர் அவர்கள் **12.01.2008** அன்று **25** வருடம் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளார். அரசாணை எண்.**222.** Finance (Paycell) Department நாள். **01.07.2013**ன் படி அன்னாருக்கு ரூ.**2000/–** வழங்க வேண்டியுள்ளது.<br>எனவே திரு.D. ஜான்பாஸ்கர், காவலர் அவர்களுக்கு ரூ.**2000/–** இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண்.3033/இ2/2018)**<br>**தீர்மானம் எண்** : 130<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| **7.** | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி **2018–19**ன் கீழ் **30.10.2018**ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிகிது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களில் மண் வண்டல்கள் மற்றும் அடைப்புகளை இயந்திரங்கள் (JCB) மூலம் அகற்றும் பணி மேற்கொள்ளுதல் | 3.00 | G.K.S. சேதுபதி | **0.06%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | M.வேலுசாமி | **2.88%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள G.K.S. சேதுபதி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்
**தீர்மானம் எண்** : 131
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 8. | இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இரண்டு இடங்களில் நுண்ணுயிரி உரமாக்குதல் மையம் கட்டுதலுக்கு உரிய மண்பரி சோதனை (Soil Bearing Capacity) மற்றும் கட்டிட வடிவமைப்பு மாதிரி தயார் செய்து அறிக்கை பெற தர முதல்வர் கோயம்புதூர் தொழில்நுட்ப கல்லூரிக்கு வரைவோலையாக வழங்கபட உள்ளது. அதற்கு ஆகும் தோராய செலவு ரூ. 1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 1845 /2018/இ1,<br><br>**தீர்மானம் எண்** : 132<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |